**செய்தி வெளியீடு எண்:726** **நாள்: 31.10.2017**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்களால் துறையின் களப்பணிகள், சிறப்புத்திட்டங்கள் மற்றும் வடகிழக்கு பருவ மழைக்கு முன் ஆய்த்த பணிகள் மற்றும் துறையில் இயங்கும் கால்நடைப் பண்ணைகளின் செயல்பாடுகள் ஆகியவை குறித்து மாவட்ட மற்றும் கோட்ட அலுவர்களுடன் விரிவான ஆய்வு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி கூட்டரங்கில் இன்று 31.10.2017 மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறையில் செயல்படுத்தப்படும் முன்னோடித் திட்டமான விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம் செவ்வனே செயல்படுத்தப்பட வேண்டும் எனவும், ஏழை எளிய மக்கள் வாழ்வாதாரம் உயரும் வகையில் திட்ட வழிகாட்டுதளின்படி செயல்படுத்தப்பட வேண்டும் எனவும் அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுறுத்தினார்.

மேலும் மாநில தீவன அபிவிருத்தித் திட்டம், கோழியின அபிவிருத்தி திட்டம் மற்றும் கிராமப்புற பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் அனைத்தும் திட்டங்களையும் சிறப்பாக செயல்படுத்துமாறு அனைத்து அலுவர்களுக்கும் அறிவுரை வழங்கினார்.

வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ள தற்போதைய நிலையில், அனைத்து மாவட்டங்களிலும், குறிப்பாக கடலோர மாவட்டங்களிலும் கால்நடைகளின் நலன் காக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், தேவைப்படும் மருந்துகள், தடுப்பூசிகள், கிருமிநாசினிகள், துறைப்பண்ணைகளில் பசுந்தீவனம் போதுமான அளவில் இருப்பு வைக்கவேண்டும். எனவும் அறிவுருத்தினார். மேலும் மாவட்டம் மற்றும் கோட்ட அளவில் விரைவு நடவடிக்கைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு தயார் நிலையில் வைத்திருக்கவேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறை இயக்குநர் திருமதி. ஜெயந்தி இ.ஆ.ப மற்றும் துறை கூடுதல் இயக்குநர்கள், துறையின் மண்டல இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**